## ஆகஸ்ட் - 9

**"உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்."**

**- மத் 6 : 23.**

"அறுவடை" கோதுமையை புடைப்பதற்காக உள்ள ஒரு சமயமாயிருக்கிறது. அதாவது, கொழிக்கிற, பிரிக்கிற ஒரு சமயம். "சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நில்லுங்கள்" என்று சொல்லியிருக்கிற பிரகாரம் நம்முடைய நிரூபிப்பது நம் ஒவ்வொருவருக்கும் உரியதாயிருக்கிறது. இந்த "அறுவடைக்குரிய" சோதனைகள் யூதயுகத்தின் அல்லது அடையாளமான "அறுவடை" குரியது போல இருக்க வேண்டும். அவைகளில் ஒன்று சிலுவை, மற்றொன்று கிறிஸ்து இரண்டாம் வருகையில் வந்திருத்தல், மற்றொன்று தாழ்மை, மற்றொன்று அன்பு, "அவர்களைச் சந்திக்கும் காலத்தை அவர்கள் அறியாமற் போனபடியால்" யூதர்கள் கடிந்துகொள்ளப்பட்டார்கள். ஒருமுறை நிகழ்கால சத்தியத்தின் வெளிச்சத்தைக் கண்டு கொண்டபிறகு "புறம்பான இருளுக்குள்" போகிறவர்களுக்கு விஷயம் இருமடங்காக மனத்துயரத்தை உண்டாக்குகிறது. இது அவர்கள் உண்மையில்லாதவர்களாய் இருக்கிறதைக் குறிக்கிறது. **- Z '04, 297(R 3436)**

நம்மில் இருக்கிற வெளிச்சம் பரிசுத்த ஆவி. அது இருளடைவது சாத்தியமானது. மனது சத்தியத்தை விட்டுவிடும் போதும், இருதயம் சத்தியத்தின் ஆவியை விட்டுவிடும் போதும், இது நேரிடுகிறது. ஞானத்தையும், வல்லமையையும், நீதியையும், அன்பையும் இழந்து விட்டு இருதயம் பாவத்தையும், தப்பான உபதேசத்தையும், சுயநலத்தையும், உலகத்தனத்தையும் கற்றுக் கொள்ளும்போது மாத்திரமே இப்படிப்பட்ட ஒரு விளைவு ஏற்படலாம். இப்படிப்பட்ட ஒருவரை மனந்திரும்புவதற்கேதுவாய் புதுப்பிக்கிறது கூடாத காரியம். அவனில் இருக்கிற இருள் பெரிதும் முடிவற்றதுமாயிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு முடிவு ஏற்படாதிருக்க வேண்டுமானால் நாம் எப்படிப்பட்ட விழிப்போடும், ஜெபத்தோடும், சுறுசுறுப்போடும் நம்மைக் காக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.! இந்த விதமாக நம்முடைய கிறிஸ்தவ ஓட்டத்தை முடிப்பதைவிட ஒருபோதும் தொடங்காமலிருப்பது அதிக நலமாயிருக்கும். **- P '34, 110.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**லூக் 11:34-36; சங் 119:105; நீதி 6:23; ஏசா 8:20; 58:8; மத் 4:15; 5:16; லூக் 16:8; யோவா 1:4-9; 3:19-21; 12:35,36; அப் 26:18; எபே 5:14; 1தெச 5:5; 1பேது 2:9; மத் 8:12; யோவா 11:9,10; 1யோவா 2:8-11.**

**கோபுர வாசிப்பு : Z '09, 231 (R 4444)**

**வினாக்கள் : வெளிச்சத்தையும் இருளையும் பற்றிய இந்தவார அனுபவங்கள் எவை? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவை எவற்றில் முடிந்தன?**